தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை
1981 மே 9, சனிக்கிழமை,
சித்திரை 27, துன்மதி திருவள்ளுவர் 2012

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:

''இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது''

இனிய சொற்கள் இன்பம் பயத்தலை காண்கின்றவன் அவற்றிற்கு மாறான வன்சொற்களை வழங்குவது என்ன பயன் கருதியோ?

1. அறிவிப்புகள்.

அ. எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்டமுன்வடிவு (ஆ. இ).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன் வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

2. அரசினர் சட்ட முன் வடிவுகள்.

அ. எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன் வடிவு தமிழ்நாடு 1981.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு எதிர் பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே இச் சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச் சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

3. வரவு-செலவுத் திட்டம் 1981-82—வாக்கெடுப்பு—(தொடர்ச்சி)

(அ) கோரிக்கை எண். 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்— (தொடர்ச்சி)

குறிப்பு: ஓர் உரையின் முன் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.